Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 243

திங்கட்கிழமை
28 ஜூலை 2025

ஆடி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## சரிந்தது ரூபாவின் பெறுமதி

விரிவு பக்:- 05



## கோத்தாபயவுக்காக ஈஸ்டர் தாக்குதலா?

### முடுக்கிவிடப்பட்டது விசாரணை
### அமைச்சர் பிமல் வெளிப்படை

கொழும்பு, ஜூலை 28

கோத்தாபய ராஜபக்சவை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்காகத்தான் உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்கள் இடம்பெற்றனவா? என்ற கோணத்தில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன - இவ்வாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

11

செம்மணிப் புதைகுழி

## 5 என்புத் தொகுதிகள் நேற்று முற்றாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 28

அரியாலை செம்மணி மனிதப் புதைகுழியில், நேற்று முன்னெடுக்கப்பட்ட பணிகளின்போது ஐந்து என்புத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. செம்மணி மனிதப் புதைகுழி மீதான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 22ஆம்

11



## புதிய பிரதம நீதியரசராக பிரீத்தி பத்மன் சூரசேன!

### ஜனாதிபதி முன்னிலையில் நேற்றுப் பதவியேற்பு

கொழும்பு, ஜூலை 28

இலங்கையின் 49ஆவது பிரதம நீதியரசராக பிரீத்தி பத்மன் சூரசேன நேற்றுக் காலை பதவியேற்றார். ஜனாதிபதி அநுரகுமார முன்னிலையில், ஜனாதிபதி செயலகத்தில் வைத்து இந்தப் பதவியேற்பு இடம்பெற்றது.

பிரதம நீதியரசராகச் செயற்

11

## மாகாணசபை தேவையா? பரிசீலனை மிக அவசியம்!

### முன்னாள் பிரதமர் தினேஷ் வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 28

மாகாணசபை முறைமையை அப்படியே கொண்டுசெல்வதா?, முடித்துக்கொள்வதா? அல்லது அதனை முழுமையாக மறுசீரமைப்பு செய்வதா? என்பது தொடர்பில் விரிவான பரிசீலனைகள் இடம்பெறுவது அவசியம் என்று முன்னாள் பிரதமர் தினேஷ்

11

சிறையில் சந்தேகநபர் பலி

## கிளிநொச்சிப் பொலிஸார் இருவர் இடைநிறுத்தம்!

விரிவு பக்கம்:- 03

## வவுனியாவில் கோர விபத்து; கிளிநொச்சி இளைஞன் பலி



வவுனியா, ஜூலை 28

வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள், கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா – பரசங்குளம் பகுதியில்

11



## சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் போதைப்பொருள் சுற்றிவளைப்பில்

### 10 ஆயிரம் பேரை இணைக்கத் திட்டம்

கொழும்பு, ஜூலை 28

நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் சுற்றிவளைப்புகளை அதிகரிக்கும் நோக்கில் சுமார் 10 ஆயிரம் சிவில் பாதுகாப்பு அதிகாரிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள அனைத்துப்

11

## எரியுண்ட நிலையில் முதியவரின் சடலம் மீட்பு

### அல்லைப்பிட்டியில் சோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

அல்லைப்பிட்டிப் பகுதியில், தனிமையில் வாழ்ந்து வந்த முதியவர் ஒருவர் எரியுண்ட நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

11

‘இதையே இப்பதான் கண்டுபிடிக்கினம் எண்டால் முழுசாக் கண்டுபிடிக்க இவையின் ஆட்சிக்காலம் காணுமோ?’

## ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகரிக்கப்படவேண்டும்!

### அமைச்சர் லால்கந்த வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதி அநுரவின் பாதுகாப்பு உயர்த்தப்படவேண்டும். இது மிகவும் அவசியமானது என்று விவசாய அமைச்சர் லால்கந்த தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதிகள் உச்சக்கட்டப்பாதுகாப்புடன் இருந்தனர். தற்போதைய ஜனாதிபதி அநுர

11

## தவறான முடிவெடுத்து பெண்ணொருவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 28

தவறான முடிவெடுத்து தனக்குத் தானே தீமூட்டிய பெண்ணொருவர் நேற்றுப் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|---|
| திகதி | 27.07.2025 | 27.07.2025 | 27.07.2025 | 27.07.2025 | 27.07.2025 | 27.07.2025 | 27.07.2025 | 27.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4145 | 1212 | 0171 | 2251 | 5903 | 1933 | 0478 | 0019 |
| ஆங்கில எழுத்து | U | | A | O | U | R | U | |
| வெற்றி இலக்கினம் | | சிம்மம் | | | | | | மேடம் |
| சுப்பர் இலக்கம் | | | | 25 | | | | |
| வெற்றி இலக்கங்கள் | 11 15 36 73 | 22 26 28 29 | 5 2 7 9 | 11 38 61 78 | 2 8 0 2 6 9 | 37 40 50 62 | 0 2 6 9 | 04 12 36 51 |
| விசேட எழுத்து | U | | | | | R | | |

# இலங்கையில் அணுசக்தித் திட்டம் ஐந்து தளங்கள் அடையாளம்

**கொழும்பு, ஜூலை 28**
**இலங்கையில் முதல் அணுமின் நிலையத்தை அமைப்பதற்கான ஐந்து சாத்தியமான தளங்களை இலங்கை அடையாளம் கண்டுள்ளதாக சர்வதேச அணுசக்தி முகவரகம் உறுதிப்படுத்தியுள்ளது.**

கடந்த 4 முதல் 18ஆம் திகதி வரை நடைபெற்ற மீளாய்வுப் பணிக்குப் பிறகு இந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒருங்கிணைந்த அணு உட்கட்டமைப்பு மீளாய்வுப் பணிக்குழு, 2022ஆம் ஆண்டில் நடைபெற்ற முதற்கட்ட சர்வதேச அணுசக்தி முகவரகத்தின் மீளாய்வுகளில் வழங்கப்பட்ட பரிந்துரைகளைச் செயற்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை மதிப்பிட்டது. அணுசக்தி உட்கட்டமைப்பை மேம்படுத்துவதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளதாக சர்வதேச அணுசக்தி முகவரகம் குறிப்பிட்டது. குறிப்பாக, உலை கொள்முதல் செய்வதற்கான ஒரு மேலாண்மைக் கட்டமைப்பை இலங்கை நிறுவியதுடன், விரிவான அணுசக்திச் சட்டவரைவையும் உருவாக்கியுள்ளது. மேலும் 2025-2044 ஆம் ஆண்டுக்கான தேசிய நீண்டகால எரிசக்தித் திட்டத்தில் அணுசக்தியைச் சேர்த்துள்ளது.

இலங்கையின் அணுசக்தி முயற்சி முதன்முதலில் 2010 ஆம் ஆண்டில் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் அணுசக்தித் திட்ட அமுலாக்க அமைப்பு உருவாக்கப்பட்டது. இதில் எரிசக்தி அமைச்சு, இலங்கை அணுசக்தி அதிகாரசபை, இலங்கை மின்சாரசபை மற்றும் இலங்கை அணுசக்தி ஒழுங்குமுறை மன்றம் ஆகியவை அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# பாதுகாப்பு அமைச்சுக்கு புதிய ஊடகப்பணிப்பாளர்

கொழும்பு, ஜூலை 28
பாதுகாப்பு அமைச்சின் புதிய ஊடகப்பணிப்பாளர் மற்றும் பேச்சாளராகப் பிரிகேடியர் பிராங்கிளின் ஜோசப் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். பிரிகேடியர் பிராங்கிளின் ஜோசப் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னதாக, இலங்கைப் பொறியியலாளர் படையணியின் தளபதியாகச் செயற்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# தலைமையிலிருந்து சஜித் நீக்கப்படமாட்டார்!

## ஐ.ம.சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28
எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து சஜித் பிரேமதாஸவை நீக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என்று கூறப்படும் செய்தி பொய். இது அரசின் கட்டுக்கதை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ எதிர்க்கட்சித் தலைவராக மிகவும் சிறப்பாகச் செயற்பட்டுவருகிறார். நாட்டு மக்கள் எதிர்நோக்குகின்ற அத்தனை பிரச்சினைகளையும் அவர் நாடாளுமன்றுக்குக் கொண்டு செல்கிறார்.

அவர் நாடாளுமன்றில் அதிகம் பேசுகிறார் என்ற குற்றச்சாட்டும் உண்டு. அப்படி அவர் பேசுவது மக்களின் பிரச்சினைகளைத்தான்.

இந்த அரசு செய்கின்ற மக்கள் விரோதச் செயல்கள், ஊழல் மோசடிகள் என எல்லாவற்றையும் அவர் நாடாளுமன்றில் அம்பலப்படுத்திவருகிறார். இது அரசுக்குப் பெரும்தலையிடியாக உள்ளது. இதனாலேயே எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து சஜித்தை நீக்குவதற்காகக் கட்சிக்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என்ற போலிச் செய்தியைப் பரப்பிவருகிறது அரசு. இதில் எந்த உண்மையும் இல்லை. சஜித் பிரேமதாஸவே தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவராக இருப்பார் - என்றார். (ச-75)

# தேர்தலில் தேசபந்து

கொழும்பு, ஜூலை 28
அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மொட்டுக்கட்சியில் குருநாகல் மாவட்டத்தில் களமிறங்குவார் என்று மொட்டுக்கட்சி வட்டாரம் தெரிவித்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் தென்னகோன். அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் குருநாகல் மாவட்டம் அவருக்கு சாதகமான மாவட்டம் எனக் கருதுவதால் அவர் அந்த மாவட்டத்திலேயே போட்டியிடுவார் என்று அந்தத் தகவல் மேலும் கூறுகிறது.

மொட்டுக்கட்சியின் விசுவாசியான தேசபந்து தென்னக்கோன் கோத்தாவின் ஆட்சியில் அந்த அரசுடன் மிகவும் நெருங்கிச் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தேசபந்து தென்னக்கோனை பதவியிலிருந்து நீக்கியமை தொடர்பிலான நாடாளுமன்றப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 5 ஆம் திகதி நாடாளுமன்றில் இடம்பெறவுள்ளது. அந்த வாக்கெடுப்பில் மொட்டுக்கட்சி தென்னக்கோனுக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-75)

**சுபிரி தன சம்பத**
திகதி: 27.07.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை | வெற்றி வாரம்: 0611
DLB
ஆங்கில எழுத்து: L | வெற்றி இலக்கம்: 0 5 6 7 5 7

**Super Ball** DLB
திகதி: 27.07.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2877 | ஆங்கில எழுத்து: O | வெற்றி இலக்கம்: 37 61 67 70

**சனிதா** DLB
திகதி: 27.07.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: K | வெற்றி இலக்கம்: 28 43 56 80 | வெற்றி வாரம்: 5038

**SASIRI** DLB
திகதி: 27.07.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 0735 | வெற்றி இலக்கம்: 23 26 33

**லக்ன ராசி**
திகதி: 27.07.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
மீனம் | வெற்றி இலக்கம்: 12 56 60 61 | சீட்டிழுப்பு வாரம்: 4589
DLB

**KAPRUKA** DLB
திகதி: 27.07.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: V | சுப்பர் இலக்கம்: 11 | வெற்றி இலக்கம்: 05 07 38 50 | வெற்றி வாரம்: 2053

**அத கோடிபதி** DLB
திகதி: 27.07.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: O | வெற்றி இலக்கம்: 02 45 66 75 | வெற்றி வாரம்: 2703

# 500 கோடி ரூபா மோசடி; முன்னாள் அமைச்சருக்கு வலை

கொழும்பு, ஜூலை 28
500 கோடி ரூபா நிதியை மோசடி செய்த குற்றச்சாட்டின்பேரில் முன்னாள் அமைச்சர் ஒருவர் விரைவில் கைதுசெய்யப்படவுள்ளார் என்று இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு வட்டாரம் தெரிவித்துள்ளது.

பல்வேறு வேலைத்திட்டங்கள் தொடர்பில் அரச நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை, தொழில் வழங்குவதற்காக இலஞ்சம் வாங்கியமை மற்றும் அந்த அமைச்சில் பணிபுரிந்த பல ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சலுகைகள் போன்றவை தொடர்பில் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழு குறித்த முன்னாள் அமைச்சரை விரைவில் கைதுசெய்யவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், முன்னைய ஆட்சியில் பாதுகாப்புப் பிரிவில் கடமைபுரிந்த அதிகாரிகள் பலரும் கைதுசெய்யப்படவுள்ளனர் என்று ஆணைக்குழு வட்டாரம் தெரிவித்துள்ளது. இவர்களுள் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிகளும் இந்நாள் உயர் அதிகாரிகளும் உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ச-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முதலீட்டாளர்களுக்கு வாயிற்கதவுகள் திறப்பு


## அச்சமின்றி முன்வருமாறு அமைச்சர் விஜித அழைப்பு



**கொழும்பு, ஜூலை 28**

**இலங்கையில் தற்போது முதலீட்டுக்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே அச்சமின்றி எமது நாட்டுக்கு வந்து முதலீடு செய்யுமாறு முதலீட்டாளர்களுக்கு நாம் பகிரங்க அழைப்பு விடுக்கிறோம் என வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

இலங்கை வர்த்தக கவுன்ஸிலின் உலகளாவிய சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கொழும்பு ஷங்கரில்லா ஹோட்டலில் நடைபெற்ற போது உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், எமது நாட்டை சர்வதேச நாடுகளுக்கு முன்பாக அழகானதும் வளமானதுமான நாடாகவும் மாற்றவேண்டும். இந்தசவாலை வெற்றிகொள்ள அரசினால் மாத்திரம் முடியாது. இதற்கு வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும். நாம் அனைவரும் இணைந்தே நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டும். எனவே முதலீட்டாளர்களுக்கு இங்கு வந்து முதலீடு செய்யுமாறு நாம் அழைப்பு விடுக்கிறோம். தற்போது சுற்றுலா அபிவிருத்தி வலயத்தின் ஊடாக 3 ஆயிரம் ஏக்கர் காணிகள் திறக்கப்பட்டுள்ளன. உலகமெங்கிலும் உள்ள இலங்கையருக்கு இந்தச் செய்தியைக் கூறுங்கள். அச்சமின்றி எமது நாட்டுக்கு வந்து முதலீடு செய்யுமாறு முதலீட்டாளர்களுக்கு நாம் அழைப்பு விடுக்கிறோம் - என்றார். (ச-இ)



# இருவேறு குற்றச்செயல்கள்: தருமபுரத்தில் மூவர் கைது

கிளிநொச்சி, ஜுலை 28

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இருவேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட மூவர் தருமபுரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கல்லாறுப் பகுதியிலிருந்து மணல் ஏற்றிப் பயணித்த இரண்டு டிப்பர் வாகனங்களும் அதன் சாரதிகளும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.
அத்துடன் அன்றைய தினம் புதுக்குடியிருப்புப் பகுதியில் இருந்து கிளிநொச்சி நோக்கி சட்டவிரோதமானமுறையில் பெறுமதிமிக்க தேக்குமரக்குற்றிகளை மறைத்து எடுத்துச் சென்ற கப்ரக வாகனம் மடக்கிடிப் பிடிக்கப்பட்டு அதன் சாரதி கைதுசெய்யப்பட்டார்.
கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களைக் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ச-113)

# கடந்த ஆண்டில் 101 ரயில்கள் தடம்புரள்வு

கொழும்பு, ஜூலை 28

கடந்த ஆண்டு ஜனவரி 15 முதல் டிசெம்பர் 31ஆம் திகதி வரையில் 101 ரயில்கள் தடம்புரண்டன என ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.
அதேவேளை 5,305 ரயில் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# போதைப்பொருள் விருந்து; 21 பேர் கைது

கொழும்பு, ஜூலை 28

கடுவெல வெலிவிட்டப் பகுதியில் பேஸ்புக்மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட விருந்தில் நடத்தப்பட்ட சோதனையின் போது 21 இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து வரி இல்லாது இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்டுகள், போதைமாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் 22 முதல் 27 வயதுக்குட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சிறையில் சந்தேகநபர் உயிர்மாய்ப்பு பொலிஸார் இருவர் இடைநிறுத்தம்!

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சந்தேகநபரொருவர் கடந்த வெள்ளிக்கிழமை உயிரைமாய்த்துக்கொண்ட சம்பவம் தொடர்பில் குறித்த பொலிஸ் நிலையத்தின் இரண்டு உத்தியோகத்தர்கள் கடமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.
கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரினால் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளையடுத்து அவர்கள் இடைநிறுத்தப்பட்டனர். சம்பவத்தின்போது பொலிஸ் நிலையத்தில் கடமையிலிருந்த, உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் கான்ஸ்டபிள் ஆகியோரே பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச-28)

## புண்ணியம் தேடி றோட்டுக்குப் போவார்...!

**கடவுளைக் கஷ்டப்பட்டுப் போய்க் கும்பிட்டால் தான் பலன் கிடைக்கும். ஏர் மாதிரி சொகுசா போய்வந்தால் கடவுள் கண்ணைத் திறக்கவேமாட்டார். ஐயப்பன் விரதம் பிடிக்கிறவை இருமுடியோட சபரிமலைக்கு போவினம். ஐயப்பன் கோயிலின்ர வருமானத்துக்கும், இந்தியாவின்ர நிலைமைக்கும் சபரிமலைக்குப் போற பாதைமுழுக்க மாபிள் கூடப் பதிக்கலாம். ஆனால் 'கல்லுத்தட்டு சபரிமலைக்கு கல்லும் முள்ளும் தான் காலுக்கு மெத்தை' எண்டதால அந்தக் காட்டுப்பாதை திருத்துப்படாமல் அப்பிடியே கிடக்குது. அந்தப் பாதையால கஷ்டப்பட்டுப் போனாத்தான் ஐயப்பன் அருள் குடுப்பார் எண்டது அவையின்ர நம்பிக்கை. இப்பிடியான நம்பிக்கை நயினாதீவு அம்மனுக்கும் இருக்கும் போல.**

**ஏனெண்டால் யாழ்ப்பாணத்தில இருந்து புங்குடுதீவு மட்டும் காப்பெற் போட்டு, வழவழ எண்டு இருக்கிற றோட், புங்குடுதீவுக்கு அங்கால குறிகாட்டுவான் மட்டும் சந்திரமண்டல நிலம் மாதிரி எங்க கிடங்கு இருக்கு, எங்க றோட் இருக்கு எண்டே கண்டுபிடிக்கமுடியாத அளவுக்கு இருக்கு. ஆரோ அம்மி பொழியிற ஆளைக் கூட்டியந்து பொழிஞ்சிருந்தால் கூட அப்பிடி இடைவெளி இல்லாமல் றோட்டு முழுக்க கிடங்கு வந்திருக்காது. அம்மாள் வருத்தம் வந்தாக்களின்ர முகம் மாதிரி றோட்டு முழுக்க கிடங்கு மட்டும்தான் பொலிஞ்சுபோய் கிடக்குது. எப்பிடி வாகனத்தை வெட்டி ஓடினாலும், ஏதும் ஒரு கிடங்குக்க வாகனம் இறங்கி ஏறாமல் போகாது. நயினாதீவுக்கு தூக்குக் காவடி எடுக்கிறவைக்கு உந்தக் கிடங்குகளால பெரும் வசதி., மேல நிண்டு ஒருத்தரும் காவடியை ஆட்டத் தேவையில்லை. ட்ரக்டரில இந்த றோட்டில சும்மா போனாலே காணும், அங்க கிடக்கிற கிடங்குகளே காவடியளை அந்த மாதிரி ஆட்டும். அப்பிடி ஒரு தெய்வீக சக்தி இருக்கிற இந்த றோட்டை திருத்த எப்பிடி மனம் வரும்? அம்மனைப் பாக்க போறதெண்டால் கஷ்டப்பட்டுப் போனாத் தான் பலன் கிடைக்குமெண்டதால , அந்த றோட்டின்ர கிடங்குகளை கனகாலமாக கண்ணுக்குள்ள வைச்சுப் பாதுகாக்கினம்.**

**கொஞ்சக்காலத்துக்கு முதல் வேலணையில இருந்தே உந்தத் தெய்வீகப் பயணத்தைத் தொடங்கலாம். ஆனால் ஆரோ உந்த றோட்டின்ர தெய்வீகம் பற்றித் தெரியாதவை அதைத் திருத்தினதால, இப்ப ஒரு பத்துக் கிலோமீற்றருக்குத்தான் திலகவதியார் மாதிரி தவண்டு போகவேண்டிக் கிடக்குது. நெல்லுக்கு இறைச்ச தண்ணி புல்லுக்கும் பொசியிறமாதிரி இந்த றோட்டால நெடுந்தீவுப் படகுக்குப் போறவைக்கும் ஓட்டமற்றிக்கா புண்ணியம் அவையின்ர பொக்கற்றுக்க வந்து விழுகுது. ஆரும் மற்றவைக்கு உந்தப் புண்ணியம் கிடைக்கிறது பிடிக்காமல் உந்த றோட்டைத் திருத்தச் சொல்லி கடிதங்கள் போட்டு, செய்தியள் போட்டு ஆய்க்கினை குடுப்பினம். அதுக்கெல்லாம் அசராமல், இப்ப எப்பிடி ஒண்டுமே தெரியாத கல்லு மாதிரி உந்தத் திணைக்களங்கள் இருக்கினமோ அப்பிடியே இருந்தால் தான் தெய்வீக சுகமும், புண்ணியமும் இந்த றோட்டால எல்லாருக்கும் எப்பவும் கிடைக்கும் கண்டியளோ.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கினால் வெற்றி கிடைக்கும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். உறவினர்கள் வருகை சில சங்கடங்களை ஏற்படுத்தினாலும் பாதிப்பு இருக்காது.

**இடபம்:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் எதுவும் இன்றைக்கு வேண்டாம். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். காலையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். பிற்பகலுக்குமேல் கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையக்கூடும். கணவன் மனைவிக்கிடையே சிறு கருத்துவேறுபாடு ஏற்பட்டாலும் உடனே சரியாகிவிடும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சி வெற்றிகரமாகமுடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகம் கிடைப்பதுடன் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** இன்று புதிய முயற்சி எதிலும் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்பட்டு நீங்கும். வெளியூர்ப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி:** காலையில் மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்படக்கூடும். பிற்பகலுக்குமேல் சோர்வு நீங்கி உற்சாகமாகக் காணப்படுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார்.

**துலாம்:** இன்று பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும்நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற சற்று அலையவேண்டி இருக்கும். அதன் காரணமாக உடல் அசதியும் மனச்சோர்வும் ஏற்படும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணை உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** உற்சாகமான நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொடுப்பீர்கள். குடும்பம் தொடர்பான முடிவுகள் எதுவும் இன்று எடுக்கவேண்டாம்.

**மகரம்:** இன்று அனைத்து விஷயங்களிலும் பொறுமை மிகவும் அவசியம். புதிய முயற்சிகளைக் காலையிலேயே தொடங்கிவிடுவது நல்லது. மற்றவர்கள் கோபத்தில் பேசினாலும், நீங்கள் பொறுமையுடன் இருக்கவேண்டியது அவசியம்.

**கும்பம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமை அவசியம்.

**மீனம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். சிலருக்கு ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். தாயின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள்.

# ‘பிரவுன்ஸ் நிறுவனம்’ 150 ஆண்டுகளை நிறைவுசெய்கிறது ரூ. 200 மில்லியன் மதிப்புள்ள விநியோகஸ்தர் வெகுமதிகள் மற்றும் 101 ஆண்டு காலத்தை நினைவுகூரும் வகையில் அஞ்சலி செலுத்துகிறது.



நாடு முழுவதும் உள்ள அதன் முக்கியமான விநியோகஸ் தர்களின் நீண்டகால விசுவாசத்தையும் செயற்றிறனையும் கௌரவிக்கும் முயற்சியாக, பிரவுன்ஸ் பேட்டரி மற்றும் டயர் மூலோபாய வணிகப்பிரிவு (SBU) சமீபத்தில் காலி முக ஹோட்டலில் (GalleFaceHotel) ஒரு மதிப்புமிக்க விநியோகஸ்தர் பாராட்டு விழாவை நடத்தியது. 2024 டிசம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் 2025 வரை நடைபெற்ற ஒரு புதுமையான விநியோகஸ்தர் தள்ளுபடி அங்கீகாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பேட்டரி மற்றும் டயர்களுக்கு ரூ. 200 மில்லியனுக்கும் அதிகமான ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கியது. இது பிரவுன்ஸ் குழுமத்தின் 150 ஆவது ஆண்டு விழா மற்றும் 101 வருடங்கள் தேசத்தில் முன்னிலையில் உள்ளதைக் குறிக்கும் வகையில் இலங்கையில் ஒரு ஆட்டோமோடிவ் பேட்டரி நிறுவனத்தால் இதுவரை பெறப்பட்ட மிக உயர்ந்த தொகையாகும்.

நாடு முழுவதும் 290க்கும் மேற்பட்ட விநியோகஸ்தர்களுக்கு வெகுமதி அளிக்கும் ஒட்டுமொத்த பிரசாரத்தின் ஒரு பகுதியாக, பிரவுன்ஸின் எக்ஸைட், லூகாஸ் மற்றும் டைஜெனெடிக் பேட்டரி வர்த்தகக் குறியீடுகளின் மிகவும் வெற்றிகரமான விற்பனையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த மாநாடு, உள்ளூர் வாகனச் சந்தையில் மிகவும் நம்பகமான சில பெயர்களை வென்றெடுப்பதில் முக்கியமான பங்குவகித்த 53 சிறந்த செயற்றிறன் கொண்டவர்களைக் கௌரவித்தது. இதுபோன்ற விநியோகஸ்தர்கள் வெகுமதி முன்முயற்சிகள், அதன் மதிப்புமிக்க கூட்டாளர் வலையமைப்பைக் கௌரவிப்பதற்கும் வளர்ப்பதற்கும் பிரவுன்ஸின் தொடர்ச்சியான முயற்சிகளை பிரதிபலிக்கிறது. இது பகிரப்பட்ட வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல், இந்தக் கூட்டாண்மைகளை அதன் செயற்பாடுகளின் உயிர் நாடியாக அங்கீகரிப்பதன் மூலமும் உள்ளது.

பிரவுன்ஸ் குழுமத்தின் 150வது ஆண்டு செயல்பாட்டுடன் இந்த நிகழ்வு இணைந்ததால், இந்த நிகழ்வு இன்னும் ஆழமான அதிர்வுகளைக் கொண்டிருந்தது. புதுமை, நம்பிக்கை மற்றும் முன்னோடி மனப்பான்மை ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நிறுவனத்தின் நீடித்த பாரம்பரியத்தைப் பறைசாற்றும் ஒரு நினைவுச்சின்ன மைல்கல் இது. 1909ஆம் ஆண்டு இலங்கையின் முதல் ஆட்டோமொபைலான Darracq Motorcar ஐ அறிமுகப்படுத்தியது முதல், குட்இயரின் ஆல் வெதர் டிரெட் டயர்களுக்கான ஒரே முகவராக இருப்பது மற்றும் கொழும்பு, ஹட்டன், கண்டி மற்றும் நாவலப்பிட்டி முழுவதும் சேவை உட்கட்டமைப்பை உருவாக்குவது வரை, பிரவுன்ஸ் இலங்கையில் முன்னேற்றம் மற்றும் இயக்கத்தை தொடர்ந்து இயக்கிவருகிறது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தருணத்துடன், 1924 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து எக்ஸைட் இலங்கை சந்தையில் 101 ஆண்டுகளைக் குறிக்கிறது. மே மாதம் குழுமத்தின் 150 ஆண்டு நிறைவுவிழாவைக் குறிக்க எக்ஸைட் இண்டஸ்ட்ரீஸின் உயர் பிரதிநிதிகள் நாட்டிற்கு வருகைதருகின்றனர். இன்று, எக்ஸைட் சக்தி, சகிப்புத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையின் அடையாளமாக நிற்கிறது. ஒரு தொழிற்றுறை தயாரிப்பைத் தாண்டி தலைமுறைகளுக்கு சக்தி அளித்து வாழ்க்கைமுறைகளை வடிவமைத்த வீட்டுப் பெயராக பரிணமிக்கிறது.

கூட்டத்தில் உரையாற்றிய பிரவுன்ஸ் என்ட் கம்பெனியின் ஒட்டோமோட்டிவ் மற்றும் ஹார்டுவேர் பிரிவின் முதன்மை தலைமை இயக்க அதிகாரி அஜித் டி சில்வா, “பிரவுன்ஸில், எங்கள் ஒவ்வொரு வெற்றிக்கும் எங்கள் விநியோகஸ்தர்கள் உண்மையிலேயே உந்துசக்தியாக இருப்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். இலங்கையில் ஒரு ஆட்டோடோடிவ் நிறுவனத்தால் இன்றுவரை வழங்கப்பட்ட மிகவும் தாராளமாக வழங்கப்பட்ட ஊக்கத்தொகைகளில் ஒன்றாக, எங்கள் நம்பகமான கூட்டாளர்களுக்கு அவர்களின் கடின உழைப்புக்கு நன்றிசெலுத்தும் விதமாக மட்டுமல்லாமல், ஒன்றாக வளரும் எங்கள் பார்வையை உறுதிப்படுத்தவும் இதை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பிரவுன்ஸின் 150 ஆண்டுகளைக் கொண்டாடும் வேளையில், வரும் ஆண்டுகளில் இன்னும் வெற்றிகரமான கூட்டாண்மைகளை உருவாக்கி கட்டியெழுப்ப நாங்கள் எதிர்நோக்குகிறோம்.”

1875ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பிரவுன்ஸ், பல ஆண்டுகளாக ஒரு வீட்டுப் பெயராக வளர்ந்து, அதன் ஆண்டுகள் நீண்டதாகவே வலுவான நற்பெயரைக் கொண்டுள்ளது. இன்று, மதிப்புமிக்க பிரவுன்ஸ் குழுமம் இலங்கையின் மிகப்பெரிய பன்முகப்படுத்தப்பட்ட கூட்டுநிறுவனங்களில் ஒன்றாகும், இது வாகனம் மின் உற்பத்தி, விவசாயம் மற்றும் தோட்டக்கல்லை மருந்துகள் முதலீடுகள், கடல்சார் மற்றும் உற்பத்தி மற்றும் ஓய்வு போன்ற பல முக்கியமான தொழிற்றுறைகளில் வேகமாக வளர்ந்துவரும் மற்றும் மதிப்புமிக்க வர்த்தக நாமக் குறியீடுகளை நிர்வகிக்கிறது - என்றார்.



# போசாக்குக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 28

பொற்பதி அறிவாலயத்தின் ஏற்பாட்டில் நல்லூர்ச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினரின் வழிகாட்டலில் சரஸ்வதி முன்பள்ளியின் போசாக்குக் கண்காட்சி-2025 கடந்த வெள்ளிக்கிழமை கொக்குவிலில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலய மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது போசாக்குத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெற்றது. யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் ஓய்வுநிலை உப அதிபர் செல்வி. மாலதி தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நல்லூர்ச் சுகாதார மருத்துவ அதிகாரி எஸ். ஜெபரட்ணம், நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் ப.மயூரன், யாழ். கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபர் திருமதி. உமாவதி ரவிகரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

தனக்குக் கிடைக்கும் ஊதியத்தின் மதிப்பைவிட தன் உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதன் தான் சமூகத்தில் உயரமுடியும்.


– ஆபிரகாம் லிங்கன் –

# கல்வி மறுசீரமைப்பில் கவனம் மிகஅவசியம்!

இலங்கையில் தற்போது நடைமுறையில் இருந்து வரும் கல்விமுறைமை, முற்றாக மறுசீரமைக்கப்படும் என்றவாறாக நாடாளுமன்றத்தில் வைத்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் தெரிவித்திருந்தார். மாணவர்களிடம் வலிந்து திணிக்கப்பட்டுள்ள இயந்திரச் சுமையான கல்வி முறைமை, ஆசிரிய ஆளணிப் பற்றாக்குறை, அதீதமான மாணவர்களுடன் இயங்கும் பாடசாலைகள், ஆகக் குறைவான மாணவர்களுடன் இயங்கும் பாடசாலைகள் மற்றும் கல்வித் திட்டங்கள் தொடர்பில் அவர் நீண்ட விளக்கத்தை வழங்கியிருந்தார். நேர்மையாகக் கூறவேண்டுமென்றால், கல்வியை நவீனமுறைமைக்குள் கொண்டு செல்வதில் இலங்கை இதுவரை தவறவிட்ட விடயங்களை ஜனாதிபதி அநுர நேராகவும் சீராகவும் சுட்டிக்காட்டியிருந்தார். ஆனாலும், அவர் தவறவிட்ட விடயங்களும் இருக்கவே செய்கின்றன.

கல்விமுறை மறுசீரமைப்பென்பது வெறுமனே மாணவர்களையும், பௌதீக வளங்களையும் மட்டுமே கொண்ட விடயமல்ல. மாணவர்களின் துன்பங்களும், அவர்களின் அதீத சுமைகளும் எவ்வாறு கவனத்திற்கொள்ளப்படுகின்றனவோ அவ்வாறுதான் ஆசிரியர்களின் சுமைகளும் கவனத்திற்கொள்ளப்படவேண்டும். கல்வி மறுசீரமைப்பு என்பதன் உண்மையான அர்த்தம் அதுதான். ஊதியக் குறைபாடுகள் மற்றும் கொடுப்பனவுப் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி ஆசிரியர்கள் கடந்த பல வருடங்களாகவே போராட்டங்களை நடத்திவருகின்றனர். அவர்களின் கோரிக்கைகள் கேட்கப்பட்டு - வாக்குறுதிகள் வழங்கப்பட்டு - பின்னர் ஏமாற்றப்பட்ட சம்பவங்களே அதிகளவில் இடம்பெற்றிருக்கின்றன. எனவே, ஆசிரியர்களின் ஊதிய உயர்வுக் கோரிக்கைகள், அவர்களின் பணிச்சுமைகள் கருத்திற்கொள்ளப்படவேண்டும். ஆசிரியர் ஒருவர் எந்தப் பாடத்தில் தகைமை பெற்றிருக்கின்றாரோ அந்தப் பாடத்துக்காக அல்லது அதற்கு மிக நெருக்கமான பாடத்துக்காகவே அவரின் நியமனம் அமையவேண்டும். 'கால்களுக்குத்தான் காலணியே தவிர, காலணியின் அளவுகளுக்கு ஏற்ப கால்களை வெட்ட முடியாது'. அதுபோல், தேவைப்படும் வெற்றிடத்துக்குத்தான் நியமனமேதவிர, பட்டப்படிப்பை நிறைவு செய்துவிட்டனர் என்பதற்காக நியமனங்கள் வழங்கப்படக்கூடாது. கடந்த காலங்களில் அவ்வாறான 'முரண் நியமனங்கள்' வழங்கப்பட்டமையும், இலங்கையின் கல்விக் கட்டமைப்பில் காணப்படும் தொய்வுக்கும் பின்னடைவுக்கும் காரணங்கள் என்றால், அதை மறுப்பதற்கில்லை. எனவே, இந்த விடயம் தீவிர பரிசீலனைக்கும் மீளாய்வுக்கும் உட்படவேண்டும்.

வகுப்பறைக் கல்விக்கு நிகராக, இணைப்பாடவிதானக் கல்வியின் அவசியம் இன்று மிகையாகவே உணரப்பட்டுள்ளது. இணைப்பாடவிதானங்களில் மாணவர்கள் முழுமையாக ஈடுபடவேண்டுமாயின், அது தொடர்பில் பூரண அறிவுடையவர்களாகவும், நிபுணத்துவப் பார்வையுடையவர்களாகவும் அவர்களுக்குப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் இருக்கவேண்டும். எனவே, இந்த விடயங்கள் அனைத்தையும் சேர்த்த மறுசீரமைப்புத்தான் இலங்கையின் கல்விக் கட்டமைப்பில் அவசியமே அன்றி, வெறுமனே மாணவர்களின் சுமைகளைக் குறைத்து, முழுமையான மாற்றங்களைச் செய்யாமல் விடுவதால் எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை.



# சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு சட்டவாக்கங்களைப் பலப்படுத்துக



*இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து*

கொழும்பு, ஜூலை 28

சட்டவாக்கக் கட்டமைப்புகளை பலப்படுத்தி - சிறுவர்களுடன் கடமையாற்றும் நிறுவனங்கள் மற்றும் தொழில்வல்லுநர்களின் ஆற்றலை மேம்படுத்தி சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்று இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் கார்மென் மொரெனோ வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் இடம்பெறுகின்ற சிறுவர்களுக்கெதிரான அனைத்துவகையான வன்முறைகளையும் எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான அழுத்தங்களை வழங்கும் நோக்கில் நடைபெறும் சர்வதேச சிறுவர் பாதுகாப்பு மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறுவர்களுக்கான நீதியில் நேர்மையும் சமத்துவமும் பிரதிபலிக்க வேண்டும்.

'பலமான சான்றுகள், வினைத்திறன்மிக்க தலைமைத்துவம், ஒருங்கிணைப்பு மற்றும் முதலீட்டுடன் இலங்கைக்கு அனைத்து சிறுவர்களும் பயன்பெறும் ஒரு பாதுகாப்பு முறைமையைக் கட்டியெழுப்பமுடியும்.

எனவே, சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளுக்குத் தீர்வு காண்பதில் கல்வித்துறையின் வகிபாகம் இன்றியமையாதது - என்றார். (ச-இ)

# ஜூலையில் 145,188 சுற்றுலாவிகள்



கொழும்பு, ஜூலை 28

ஜூலை மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 188 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் எனச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ரூபா சரிவு

கொழும்பு, ஜூலை 28

கடந்த சில வாரங்களில் இலங்கை ரூபாவின் பெறுமதியானது குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜூலை மாதம் 25ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதியானது 3.1 சதவீதம் வீழ்ச்சியடைந்திருந்தது.


கடந்த வார இறுதியில், இது 3 சதவீதமாக பதிவாகியிருந்தநிலையில், ஜூன் மாத இறுதி வாரத்தில் இந்த வீழ்ச்சி 2.5 சதவீதமாக பதிவாகியுள்ளது. (ச)



# மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜூலை 28

மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அடிக்கடி மழை பெய்யக்கூடும் எனவும் வடமேல் மாகாணத்தில் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. புத்தளம் தொடக்கம் கொழும்பு.காலி ஊடாக மாத்தறை வரையான கடற்பிராந்தியங்களில் அடிக்கடி மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# காசோலை மோசடிக்கு இனி சிறை

கொழும்பு, ஜூலை 28

வங்கிகளில் போதுமான நிதி இல்லாது காசோலைகளை விநியோகிக்கும் நபர்களுக்கு அபராதம் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கான சிறைத்தண்டனை வழங்கும் வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

காசோலையை வழங்கிய ஒருவர், காசோலையைப் பெற்றவரின் கோரிக்கையின்கீழ் 90 நாள்களுக்குள் பணத்தைச் செலுத்தாது போனால் இந்தத் திருத்தத்தின் கீழ் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை செவ்வாய்க்கிழமை - ஆடி 13
29.07.2025
சுபநேரம் : 10.33 - 12.03
ராகுகாலம் : 03.03 - 04.33

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 'மக்களுடன் ஊராட்சி' நடமாடும் சேவை

மக்களுடன் ஊராட்சி என்ற உயரிய நோக்கத்துக்காக மக்களுக்கான சேவையை மக்களிடம் சென்று வழங்கும் நோக்குடன் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது என்று வவுனியா தெற்குத் தமிழ்ப் பிரதேசசபையின் தவிசாளர் பா. பாலேந்திரன் தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக நாளை செவ்வாய்க் கிழமை கந்தபுரம் வட்டாரத்துக்குட்பட்ட தோணிக்கல் ஆர்.டி.எஸ். மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் பி.ப. 3 மணிவரையில் நடமாடும் சேவை இடம் பெறவுள்ளது. எதிர்காலத்தில் ஏனைய வட்டாரங்களுக்கும் இந்த நடமாடும் சேவையை விஸ்தரிக்க வுள்ளோம்.

குறித்த சேவையில் விளம்பரப்பலகைக் கட்டணம், சோலைவரி, ஆதனப்பெயர் மாற்ற ஆலோசனைகள், எல்லைக் கோட்டுச் சான்றிதழ் சேவை, வியாபார உரிமம், வியாபாரவரி, வியாபார பெயர்ப்பதிவு, வழி அனுமதிப்பத்திர ஆலோசனைகள், கட்டட அனுமதி ஆலோசனைகள், கழிவகற்றல் சேவை, வீதி விளக்குக் கோரிக்கைகள், ஆயுள்வேத மருத்துவ சேவை, நூலக நடமாடும் சேவையும் அங்கத்துவப் படிவம் வழங்கலும், முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளல், 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட முன்மொழிவுகள் பெறல் உள்ளிட்ட மேலும் பல சேவைகளை வட்டாரத்துக் குட்பட்ட பொதுமக்கள் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ச-110)

### நல்லூர்த் திருவிழாவுக்காக

# அம்பன் கிழக்கிலிருந்து எதிர்ப்புக்கு மத்தியில் மணல்

யாழ்ப்பாணம், ஜூலை 28

**அம்பன் கிழக்கில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தீர்மானத்தை மீறி மணல் அகழப்பட்டு நல்லூர் ஆலயப் பெருந்திருவிழாவுக்காக பொலிஸ் பாதுகாப்புடன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மணல் விநியோகம் இடம்பெற்றது.**



நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவுக்காக வருடந்தோறும் குறிப்பிட்ட மணல்மண் வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் இருந்து பிரதேச மக்களின் அனுமதியுடன் வழங்கப் பட்டுவந்தது. திருவிழா நிறைவடைந்ததும் குறித்த மணல் விற்பனை செய்யப்படுகிறது. இந்நிலையில் அம்பன் கிழக்கில் பத்து இலட்சம் கியூப் மணல் மண் அகழப் பட்டு சூழற்சமநிலை பாதிக்கப்பட்டநிலையில் தமது கிராமத்தை தொடர்ந்து அழிவுக்கு உட்படுத்தக்கூடாது என்றும் தொடர்ச்சியாக அம்பன் கிழக்கில் மட்டும் மணலை அகழக்கூடாது என்றும் தெரிவித்து மணல் மண் வழங்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. வடமராட்சி கிழக்கு அம்பன் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் தமது கிராமத்தில் மணல் மண் அகழ்வு மேற்கொள்ளவேண்டாம் எனத் தீர்மானமும் நிறைவேற்றியது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் பிரதேச மக்களின் எதிர்ப்பின் மத்தியிலும் பொலிஸ் பாதுகாப்புடன் மண் விநியோகம் இடம்பெற்றது.

இதேவேளை சில வருடங்களுக்கு முன்னர் தனிநபர்கள் எவருக்கும் கனியமணல் அகழ்வுக்கு அனுமதிவழங்கக்கூடாது என ஒருங்கிணைப்புக் குழுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. எனினும் தனிநபர் ஒருவரது பெயரில் கனியவளங்கள் மற்றும் புவிச்சரிதவியல் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்று வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் நடவடிக்கைகள் மேற்கொண்டுவருகிறார் என அம்பன் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. (ச-27)



## வலி.கிழக்குப் பிரதேசசபையில் கறுப்பு ஜூலை நினைவேந்தல்

கொழும்பு, ஜூலை 28

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வுகள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

இதன்போது கறுப்பு ஜூலை இன அழிப்பில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் மற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட அரசியற்கைதிகளையும் நினைவுகூர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டுத் பொதுஈகைச் சுடரினை தவிசாளர் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து உறுப்பினர்கள் சுடர் விளக்குகளை ஏற்றி அஞ்சலித்தனர். (ச)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

வேலணை பெருங்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோவில் விசுவாவசு வருட மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 10.30மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதிவியாழக்கிழமை இரவு 10மணிக்கு சப்பறத்திருவிழாவும், 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்குத் தேர்த்திருவிழாவும், பி.ப. 2மணிக்கு வரலட்சுமி விரதப் பூஜையும், 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும், இரவு 7மணிக்குக் கொடியிறக்கமும் இடம்பெறும். தினந்தோறும் மாலை 4மணி முதல் 5மணி வரை ஆலய பஜனைக் குழுவினருடன் ஆலய அறநெறி மாணவர்களின் பஜனையும் இடம்பெறவுள்ளது. (ச-41)



அரியாலை பிரப்பங்குளம் நாச்சியம்மன் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்றுக் காலை அடியார்களின் அரோகரா கோஷத்துடன் பக்திபூர்வமாக இடம் பெற்றது. (ச-17)





நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று நூற்றுக்கணக்கான அடியார்களின் பங்கேற்புடன் சிறப்பாக இடம்பெற்றது. இன்று திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது. (ச-17)

## இலட்சார்ச்சனையும் வரலட்சுமி பூஜையும்

யாழ்ப்பாணம், ஜூலை 28

இணுவில் திருப்பதி அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய மஹாலட்சுமி தாயாரின் இலட்சார்ச்சனை ஹோம வழிபாடும் விஷேட அலங்காரப் பூஜையும் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30மணிக்கு மகாலட்சுமிக்கு விஷேட அபிஷேகமும் காலை 7.30மணிக்கு விஷேட பூஜையும், மாலை 4.30மணிக்கு வரலட்சுமி விரதம் அனுஷ்டிப்போருக்கு சிறப்புப் பூஜையும், தொடர்ந்து தாயார் வீதியுலாவரும் காட்சியும் நடைபெறவுள்ளன. தினமும் இரவு 7மணிக்கு அன்னதானமும் இடம்பெறும். (ச-41)

## நாயன்மார்கட்டுக் குளம் யாழ். முதல்வர் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்.மாநகரசபை சங்கிலியன் தோப்பு ஐந்தாம் வட்டாரம் நாயன்மார்கட்டுக் குளத்தின் பிரச்சினைகள் தொடர்பில் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி மதிவதனி தலைமையிலான குழுவினர் களவிஜயம் ஒன்றை அண்மையில் மேற்கொண்டு ஆராய்ந்தனர்.

இதன்போது ஒருபக்கக் குளக்கட்டு இடிந்திருந்தமையால் குளமானது எல்லைப்படுத்தமுடியாதவகையில் காணப்படுகின்றமை, குளத்தின் எல்லைகள் மற்றும் குளப்பகுதிகளைச் சுற்றிப் பற்றைகள் வளர்ந்துள்ளமை என்பன அவதானிக்கப்பட்டன. குறித்த பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு மாநகர முதல்வர் ஆலோசனை வழங்கினார். (ச-25,20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மன்னார் நகரசபைக் கூட்டத்தில் பல்வேறு திட்டங்களுக்கு அனுமதி

மன்னார், ஜுலை 28

மன்னார் நகரசபையின் கூட்டம் மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது பல்வேறு திட்டங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி காசோலையில் முதலாவது மற்றும் இரண்டாவது ஙகையொப்பமிடுதலுக்கான அனுமதி, ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின்மூலம் அனுமதிக்கப்பட்ட வேலைத்திட்டத்தினை சனசமூக நிலையத்துக்கு ஒப்பந்தம் வழங்கி நிறைவேற்றுதல், சபை நிதியில் மேற்கொள்ளப்படவுள்ள நகர மண்டப மின்னிணைப்புக்கான மின்மாற்றி அறையை அமைத்தல், நகர சபையில் கடமையாற்றும் ஒப்பந்தப் பணியாளர்கள் மற்றும் நிரந்தர அலுவலர்களுக்கு சம்பளத்தை வழங்குதல், நிரந்தர அலுவலர்களின் சம்பளத்தில் 20 வீதத்தை சபை நிதியிலிருந்து வழங்குதல் ஆகியவற்றுக்கு தவிசாளரினால் கூட்டத்தில் அனுமதி கோரப்பட்டது. அதற்கு உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்த நிலையில் குறித்த விடயங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. இதேவேளை மன்னார் நகரசபையில் 16 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும்நிலையில் 8 உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25,56)

## மரண அறிவித்தல்



### துரைரத்தினம் தேவி

சித்தங்கேணியை பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட துரைரத்தினம் தேவி (ஓய்வு பெற்ற ஆசிரியை யூனியனா கல்லூரி தெல்லிப்பழை) அவர்கள் நேற்று (27.07.2025) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தாமு துரைரத்தினம் அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற மார்க்ஸ், ஜெயந்தன், லெனினா. சங்கீதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், DR. திலீபன் அவர்களின் மாமியாரும், ஆரோனின் அன்புமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதியன ஆராதனை தெல்லிப்பழையில் உள்ள அன்னாரின் வீட்டில் அன்று இன்று (29.07.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
DR. திலீபன்
077 991 0373

## மரண அறிவித்தல்



### முருகையா மருதாயி (லக்ஸ்மி)

கொழும்பை பிறப்பிடமாகவும், பலாலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா மருதாயி (லக்ஸ்மி) அவர்கள் நேற்று (27.07.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையா அவர்களின் மனைவியும், சுவேந்திராஜா (ராஜன் - மன்னார்), பாலேந்திரன் (கொழும்பு), ஜோகராசா (கொழும்பு), மகேந்திரன் (ஶ்ரீ ஜங்கரன் வெதுப்பகம் இனுவில்), கலாதேவி, சித்திராதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2025) திங்கட்கிழமை பிற்பகல் 12.00 மணியளவில் மானிப்பாயில் உள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 302 7824
(மகேந்திரன் ஶ்ரீ ஜங்கரன் வெதுப்பகம்)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

மலர்வு 16.06.1962

உதிர்வு 27.07.2025



### திருமதி. விமலாதேவி நாகராசா

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 12ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. விமலாதேவி நாகராசா நேற்று (27.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகமுத்து - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், நாகராசா (ஓய்வு நிலை அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், பிரதீபன் (பிரதேச செயலகம் ஊர்காவற்துறை), பிரசாந்தன் (உப தபால் அதிபர் புங்குடுதீவு), கிந்துஜா (Medical Laboratory Technologist), நிரோஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நிசாந்தினி, துஷ்யந்தி (Accountant world enterprises), திருமாறன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பாலசுப்பிரமணியம், சிவபாக்கியம், காலஞ்சென்ற சிவகுருநாதன், சிவராசா, காலஞ்சென்றவர்களான தருமரத்தினம், கமலாதேவி மற்றும் மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரியும், செல்லத்துரை, இராசலெட்சுமி, நாகேஸ்வரி, காலஞ்சென்ற ஓங்காரநாதன், சண்முகராசா, அருளானந்தம், சிவலிங்கம், கேதீஸ்வரி (ஆசிரியை யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2025) புங்குடுதீவு 12ம் வட்டாரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் மணற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
077 986 6094

(CR 45645) D*

## மரண அறிவித்தல்

தோற்றம் 20.09.1940

மறைவு 23.07.2025



### தேசமான்ய சிவஸ்ரீ கந்தையா சோமசுந்தரம் குருக்கள்

யாழ்ப்பாணம் கரவெட்டியை பிறப்பிடமாகவும் குரும்பசிட்டி இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கரவெட்டி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான குருக்களும், ஓய்வு பெற்ற அதிபரும், சமாதான நீதவானும் ஆகிய தேசமான்ய சிவஸ்ரீ கந்தையா சோமசுந்தரம் குருக்கள் அவர்கள் கடந்த (23.07.2025) புதன்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கரவெட்டி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான உரிமையாளரான வேதையா கந்தையா குருக்கள் - அன்னம்மா தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சிவசுப்பிரமணியம் பொன் பரமானந்த(ஐயா வாத்தியார் - குரும்பசிட்டி) - சிவகொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், சோமசுந்தரம் அகிலாண்டேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான தியாகராஜாக்குருக்கள் (தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலய பிரதம குரு) மற்றும் தெய்வானை ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பவானந்தன் (பவன், ஆசிரியர் யா/ உடுவில் மகளிர் கல்லூரி), நித்தியானந்தன் (ஜெயன்-கனடா), ஈஸ்வரகௌரி (கௌரி-மீசாலை), சுந்தரீஸ்வரி (சுந்தரி-பிரான்ஸ்), புஷ்கலா (கலா-கனடா), முகுந்தன் (அதிபர் மு/அலம்பில் ரோமன் கத்தோலிக் மகா வித்தியாலயம்), நிசந்தன் (கனடா-மொரட்டுவ பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உஷா (இருபாலை) சந்திரமௌலீசன் (மீசாலை-ஓய்வு பெற்ற ஆசிரியர்), வைத்தீஸ்வரன் (பிரான்ஸ்), வினோதன் (கனடா), யாழினி (ஆசிரியர் மு/கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயம்), கேதாரணி (கனடா - மொரட்டுவ பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரவீன், அபியுகா, கனிஷன், சுதேஷ்னா, லகீசன், அகரகன், கன்விகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் செவ்வாய்க்கிழமை (29.07.2025) அன்று மாலை 05.00-09.00 மணி வரையும் மறுநாள் புதன்பிழமை (30.07.2025) காலை 08.00-09.00 மணி வரையும் மக்களின் பார்வைக்காக Ajax மண்டபத்தில(384 Finley Ave, Ajax, ON L1S 2E3) வைக்கப்படும். அதனை தொடர்ந்து இறுதிக்கிரியைகள் 11.00 மணி வரை நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பவானந்தன் - 077 945 1373
முகுந்தன் - 077 826 7971 , நிசந்தன் (கனடா) +1(647)9183396

ஸ்ரீலக்ஸ்மி வாசா, டச்சு றோட்
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கண்டல்காடுகள் விழிப்புணர்வு மாணவர்களுக்கு களப்பயணம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

மாணவர்கள் மத்தியில் கண்டல்காடுகள் தொடர்பான விழிப்புணர்வையும், அவற்றைப் பாதுகாக்கவேண்டும் என்ற மனநிலையையும் ஏற்படுத்துவதை மையமாகக்கொண்டு பாடசாலை மாணவர்களுக்கான கண்டல்காடுகள் ஊடான களப்பயணமொன்று அண்மையில் மண்டைதீவு சதுப்பு நிலப்பகுதியில் ஒழுங்குசெய்யப்பட்டது. எதிர்காலத்துக்கான சுற்றுச்சூழல் கழகம் மற்றும் சிறகுகள் அமையம் இணைந்து சர்வதேச கண்டல்காடுகள் தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக் கழகத் தாவரவியல் துறையின் தொழில்நுட்ப அனுசரணையுடன் இந்தக் களப்பயணத்தை முன்னெடுத்தன.

இந்தச் செயற்பாட்டுக்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை யாழ். பல்கலைக்கழகத் தாவரவியல் துறைத் தலைவர் பேராசிரியர் இ.சி.ஜெயசீலன் தலைமையிலான மாணவ அணியினர் வழங்கினர்.

இதில் அராலி கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையைச் சேர்ந்த 70 மாணவர்கள், சிறகுகள் அமையத்தைச் சேர்ந்த இளைஞர்கள், சுத்தமான கடற்படை நிறுவன உத்தியோகத்தர்கள், வனவிலங்குகள் பாதுகாப்புச் சங்கத்தைச் சேர்ந்தோர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-27)



## மாவைக்கந்தனின் மாம்பழத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 28

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய விசுவாவசு வருட மஹோற்சவத் திருவிழாவின் இருபத்தாறாம் நாள் திருவிழாவான மாம்பழத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை இரவு பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-41-66)



## வேட்டைத்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 28

மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் எட்டாம் நாள் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை வெகு சிறப்பானமுறையில் இடம்பெற்றது.

பகல் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து மாலை 5மணியளவில் வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று குதிரை வாகனத்தில் எழுந்தருளிய பேச்சியம்மன் திருப்பூர் கடற்கரைத் திடலில் வேட்டையாடி சங்கரியார் வளவு வீதி ஊடாகப் பயணித்து பிரதான வீதி வழியே ஆவளைச் சந்தியைச் சென்றடைந்தார்.

அங்கிருந்து மறுபடியும் பிரதான வீதி வழியாகப் பயணித்து திருப்பூர் வீதியூடாக இரவு 8.30மணியளவில் ஆலயத்தை வந்தடைந்தார். (ச-41-100)

## நிர்வாகத்தெரிவும் பொதுக்கூட்டமும்

கிளிநொச்சி, ஜூலை 28

கிளிநொச்சி மாவட்ட இளைஞர் கழக சம்மேளன புதிய நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறைப் பிரதியமைச்சர் எரங்க குணதிலகவின் தலைமையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.



நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், உதவி மாவட்டச் செயலாளர் எச்.சத்தியஜீவிதா, ,இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாண உதவிப் பணிப்பாளர், இளைஞர் சேவை உத்தியோகத்தர், இளைஞர், யுவதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், கடந்தகால அரசாங்கத்தினால் இளைஞர்களின் செயற்பாடுகள் முன்கொண்டுசெல்லப்படவில்லை. ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் இளைஞர்களின் பங்களிப்பு உறுதிப்படுத்தப்படும் எனப் பலர் நினைக்கின்றனர். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் பின்பு கல்வியில்லை என்று நினைக்கின்றனர்.

இன்று தொழிற்கல்வி உருவாக்கப்பட்டுள்ளது-என்றார். (ச-41-113)



## கடலட்டை உற்பத்தி அதிகரித்தால் சூழல் சமநிலை சீர்குலையும்

### ஆளுநர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 28

வடக்கு மாகாணத்திலிருந்து கடலட்டையின் ஏற்றுமதிகள் இரட்டிப்பாகியுள்ளன. எனினும் கடலட்டை உற்பத்தியை அதிகரிப்பதை மாத்திரம் நாம் இலக்காகக்கொண்டு செயற்பட்டாலோ அல்லது சட்டவிரோதமான நடவடிக்கைகளை அனுமதித்தாலோ கடல் சுற்றுச்சூழல் அமைப்பின் நுட்பமான சமநிலை சீர்குலையும் என்று வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் சுட்டிக்காட்டியுள்ளார்.

சினமன்குளோபல் நிறுவனம், யாழ். பல்கலைக்கழகம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற கடலட்டை உற்பத்தி தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றும்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய கடற்கரைகள் பல்வேறு காரணங்களுக்காக வேட்டையாடப்படுகின்றன. சட்டவிரோதமான வர்த்தகத்துக்கான மையப்புள்ளியாக மாற்ற முயற்சிக்கப்படுகின்றது.

எமது கடலோரப்பகுதியின் சில பகுதிகள் பாதுகாக்கப்பட்ட கடல் சரணாலயங்களாகக் குறிக்கப்படவேண்டும். அங்கு, மீன்பிடித்தல் உள்ளிட்ட எந்தவொரு விடயங்களும் அனுமதிக்கப்படக்கூடாது. இந்தப் பகுதிகள் கடல் பல்லுயிர் பெருக்கத்தை மீட்டெடுக்க உதவும்.

சுற்றுச்சூழல் தரவுகளைப் பயன்படுத்தி, நிலையான கடலட்டைப் பண்ணை எங்கு நடக்கலாம், எங்கு தவிர்க்கப்படவேண்டும் என்பதை நாம் அடையாளங்காணவேண்டும். பண்ணைகளை நவீனமயமாக்குவதற்கும், கண்டறியும் தன்மையை மேம்படுத்துவதற்கும் டிஜிற்றல் கருவிகளைப் பயன்படுத்துதல், நிலையான மீன்வளர்ப்புக் குறித்த தொழிற்பயிற்சி மையங்களைத் தொடங்குதல், விவசாயிகளுக்குத் தொடர்ச்சியான கற்றலை வழங்குதல் என்பனவற்றை முன்னெடுக்கலாம்-என்றார். (ச-25,113)

## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 28

சாவகச்சேரிப் பிரதேசசபையின் தவிசாளர் பொ.குகதாசன், மட்டுவில் நுணாவில் வட்டார உறுப்பினர் யோ.டர்சன் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்பதாம் வட்டார அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் அ. மதன்ராஜ் தலைமையில் ஜே/310 கிராம அபிவிருத்தி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், மட்டுவில் மத்தி வட்டார உறுப்பினர் ஜீ.தருசன், ஓய்வுநிலை அதிபர் ச.கிருஷ்ணன், சமூகமட்ட அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷாந்தி கொலைக்குற்றவாளியின் சாட்சியம் இனவழிப்புக்கான சான்று

## மக்கள் போராட்ட முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

கிருஷாந்தி குமாரசுவாமி கொலையின் குற்றவாளியாக அடையாளங்காணப்பட்ட சோமரட்ண ராஜபக்ச நேரடியாக அளித்த சாட்சியம் ஊடாக நாங்கள் இந்த செம்மணி விவகாரத்தை அணுகவேண்டும். குற்றங்களை இழைத்தவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்த வேண்டும் என மக்கள் போராட்ட முன்னணியின் ராஜ்குமார் ரஜீவ்காந் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்குத் தமிழர்கள் கோரும் சர்வதேச நீதிப் பொறிமுறையூடான நீதி கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை காரியாலயத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 300 முதல் 600 வரையிலானோரை கொலை செய்து எங்களிடம் மேலதிகாரிகள் தந்தார்கள், இங்கு கொண்டுவந்து அவர்களைப் புதைத்திருக்கின்றோம் என கிருஷாந்தி குமாரசுவாமி கொலையின் குற்றவாளியாக அடையாளங்காணப்பட்ட சோமரட்ண ராஜபக்ச சாட்சியம் வழங்கியுள்ளார்.

இது ஓர் இன அழிப்பின் சான்றாக, ஓர் இனத்தின் மேல் நிகழ்த்தப்பட்ட பெரும் கொலையாக நாங்கள் இதனைப் பார்க்க வேண்டும். இது மிகப்பெரிய தண்டனைக்குரிய குற்றம் என்பதை மறந்துவிடக்கூடாது.

நாட்டின் பிரஜைகளைக் கொன்றொழித்த இராணுவத்தினரை எவ்வாறு வெற்றிவீரர்களாகக் கொண்டாட முடியும். இந்தக் குற்றங்களை இழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இதற்கு உள்நாட்டுப் பொறிமுறையில் நம்பிக்கையில்லை. சர்வதேச நீதி விசாரணையொன்றே அவசியம் - என்றார்.

(ச-இ)

---

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 07.06.1937 மறைவு 23.07.2025

வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், தற்போது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட எமது சிறிய தாயாராகிய

**அன்னலட்சுமி இரட்ணசிங்கம்**

அவர்களின் இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

406, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

காராளசிங்கம் குடும்பத்தினர்

---

## கிருஸ்ணா அடைவு கடை

பதிவு இல J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2024 ஆம் ஆண்டு (30.07.2024) இற்கு முன்னர் அடைவு வைத்த நகைகள் யாவற்றையும் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதிக்கு (30.08.2025) முன்னர் மீட்கவும்.

மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 30.08.2025 ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு :- 2024 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 30 ஆம் (2024.07.30) திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

இல: 370.கே.கே.எஸ்.வீதி
யாழ்ப்பாணம்
021 490 0311, 021 222 5180,
077 080 4656

உரிமையாளர்,
இல: 09
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 10 . 1941



மறைவு 28 . 07 . 2022

**அமரர் கபிரியேல்பிள்ளை அருளப்பு**


உங்கள் நிழல் எங்களை விட்டு நீங்கிய தினம்தான்.
இன்றோடு மூன்று ஆண்டுகள் ஆனது.
ஆண்டவரால் அழைக்கப்பட்டாலும்.
உங்கள் சாயல் எங்களுள் என்றும் வாழ்கிறது.
வானத்தில் இளைப்பாறும் உங்கள் ஆன்மா,
இங்கு எங்களுள் ஒளியாக வழிகாட்டுகிறது.
நீங்கள் விட்டுச் சென்ற நம்பிக்கையும் ஜெபமும்,
எங்களை ஆண்டவருக்குள் வலிமைபடுத்துகின்றன.
"நீ சாகிலும் நம் இடையிலே நீ வாழ்கிறாய்."
உங்கள் நினைவில், எங்கள் ஜெபங்களில் என்றும்...

35B, சோமசுந்தரம் அவனியு,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்

நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

## ஓராண்டு நினைவுநாள் அழைப்பு



கடந்த 08.08.2024 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

**அமரர் வைத்திலிங்கம் விவேகானந்தம்**

அவர்களின் ஓராண்டு நினைவு நாள் இன்று (28.07.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசமேதராய் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.177, 1ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

தோற்றம் 19.06.1953 மறைவு 27.07.2025

**சின்னையா சிவபாக்கியநாதன்**

வேலணை மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவபாக்கியநாதன் நேற்று (27.07.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, செல்வநாயகம், சிவஞானசுந்தரம் மற்றும் சிவசுப்ரமணியம், சிவபாதசுந்தரம், சிவகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் சுகிர்தவதி, கருணைநாயகி, ரட்ணேஸ்வரி, சரோஜாதேவி, Dr.சிவபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2025) வேலணை மேற்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக வேலணை மேற்கு அம்பலவி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
076 791 1496

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விமானநிலையங்களில் பனை உற்பத்திகள் காட்சிக்கூடம்

## விரைவில் நடவடிக்கையென கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

**இலங்கையிலுள்ள சர்வதேச விமானநிலையங்களில் பனை உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்துவதற்குரிய காட்சி அறைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், பனை உற்பத்தித் துறையிலும் மாற்றமொன்று தேவை. பனை சம்பந்தப்பட்ட பொருள்களை நவீன பொருள்களாக மாற்றவேண்டும். உற்பத்தி அதிகரிப்பு உள்ளிட்ட விடயங்களில் நவீன தொழில்நுட்பம் பற்றியும் அவதானம் செலுத்தப்படவேண்டும். பனை உற்பத்திப்பொருள்களை, இலங்கையிலுள்ள சர்வதேச விமான நிலையங்களிலும் காட்சிப்படுத்துவதற்குரிய திட்டம் உள்ளது. அதற்குரிய நடவடிக்கையை எமது அரசாங்கத்தின்கீழ் மேற்கொள்வேன் - என்றார். (ச-இ)



# இணுவிலில் யோகாப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 28

உலக சமாதான ஆலயத்தின் அனுசரணையுடன் இலவச யோகாப் பயிற்சி வகுப்புகள் யாழ். இணுவில் இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் ஆரம்பமாகித் தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் நடைபெறவுள்ளன.

சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 4 மணியளவில் இடம்பெறவுள்ள இந்தப் பயிற்சி வகுப்புகளில் யோகாக்கலை பற்றிய விளக்கமும், நோய்கள் குணமாக எவ்வாறான யோகாசனங்களை மேற்கொள்ளவேண்டும்? என்பது தொடர்பிலும், யோகாக் கலையுடன் சுவாசப்பயிற்சி வகைகள் மற்றும் தியானப் பயிற்சியினை மேற்கொள்வது தொடர்பிலும் விரிவான செய்முறை விளக்கங்கள் வழங்கப்படும்.


இந்தப் பயிற்சி வகுப்பில் இருபாலாரும் கலந்துகொள்ளமுடியும். கலந்துகொள்ள விரும்புவோர் 0770476398 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)



வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய விசுவாவசு வருட மஹோற்சவத் திருவிழாவின் கப்பல் திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் காங்கேசன் துறைக் கடற்கரையில் பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் மிகவும் சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் இடம்பெற்றது. (ச-66)


## மரண அறிவித்தல்

மலர்வு
01
.
04
.
1952



உதிர்வு
27
.
07
.
2025

**நமசிவாயம் முத்துலிங்கம்**

(ஓய்வு பெற்ற சங்கானை பனை தென்னைவள அபிவிருத்திச்சங்க களஞ்சிய பொறுப்பாளர்)

மலேசியாவை பிறப்பிடமாகவும், பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் முத்துலிங்கம் அவர்கள் நேற்று (27.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் - இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமசாமி (அப்பர்) - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நிர்மலாதேவி அவர்களின் அன்புக்கணவரும், பாபுஜி, சஜீவன் (சிறைச்சாலை உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்), சங்கீதா (உதவி பிரதேச செயலாளர் சண்டிலிப்பாய்), நிரோஜன் (பொலிஸ் உத்தியோகத்தர் வல்வெட்டித்துறை), கார்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோகிலதர்சன், டிலக்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிநிலாவின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பண்ணாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.
0774002202




கிளாலி புனித யாகப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 25ஆம் திகதி அருட்பணி ஜெயறஞ்சன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. திருநாள் திருப்பலியை அருட்பணி மைக்கல் சௌந்தரநாயகம் அடிகளார் ஒப்புக்கொடுத்தார். தொடர்ந்து புனிதரின் தேர்ப்பவனியும் இடம்பெற்றது. (ச-63)

கோப்பாய் மத்திய மகா முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்றுக் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. இன்று காலை ஆடிப்பூரத் தினத்தன்று தீர்த்தத் திருவிழா நடைபெறும். (ச-17)

# ஒன்றுகூடல்



யாழ்ப்பாணம், ஜூலை 28

வடக்கு மாகாண இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவைச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் சேவைநலன் பாராட்டு விழாவும் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலுக்கு அண்மையில் அமைந்துள்ள திவ்ய மஹால் திருமண மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாண ஓய்வுநிலைப் பிரதம செயலாளர் இ. இளங்கோவன் விசேட விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (ச-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்; விசாரணைகளில் முன்னேற்றம்

## அமைச்சர் சமந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட அனைவரும் தற்போது விசாரணைகள் நியாயமாக முன்னெடுக்கப் பட்டுவருவதை நன்கு அறிவார்கள். இதனுடன் தொடர்புடைய சூத்திர தாரிகள் விரைவில் சமூகத்துக்கு வெளிப்படுத்தப்படுவர் என அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆட்சிக் காலங்களில் இந்த விசாரணைகள் தொடர்பில் நம்பிக்கையற்ற தன்மையே காணப்பட்டது. கடந்த காலங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டபோதிலும், சட்ட ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படவில்லை.

ஆனால் இன்று சட்டம் முறையாக நடைமுறைப் படுத்தப்படுகிறது என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. நீண்டகாலத்தை எடுத்துக்கொள்ளாது விரைவில் இந்த உண்மைகள் சமூகத்துக்கு வெளிப்படுத்தப்படும் -என்றார். (ச-இ)

### 5 என்புத்...

நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே, ஐந்து என்புத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதன்படி, இதுவரை 95 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

நேற்றையதினம் விடுமுறை என்பதால் அரைநாள்கள் மாத்திரமே அகழ்வுப்பணிகள் இடம்பெற்றன. புதிதாக என்புத் தொகுதிகள் எவையும் அடையாளப்படுத்தப்படவில்லை.

நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும், மற்றும் கலைப்பீட தொல்லியற் துறை மாணவர்களும் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### புதிய...

பட்ட மூர்து நிரூபா பிதுஷினி பெர்னாண்டோவின் ஓய்வுபெற்றுச் சென்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு, நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேனவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அவரது நியமனத்துக்கு அரசியலமைப்புப் பேரவை அங்கீகாரம் வழங்கியதைத் தொடர்ந்தே, அவர் 49ஆவது பிரதம நீதியரசராக நேற்றுப் பதவியேற்றார். (அ-ம-இ)

### மாகாணசபை...

குணவர்த்தன தெரிவித்துள்ளார். ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

40 வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை முறைமை இன்று பயன்படுகின்றதா? அல்லது அரசியல் சவால்களை எதிர்கொள்கின்றதா? என்பதை நாங்கள் ஆராயவேண்டும். அத்துடன், மாகாணசபை முறைமையின்றி கடந்த பல வருடங்களாக நாடு இயங்கியுள்ளது என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும்.

கடந்த 2014ஆம் ஆண்டு இறுதியாக ஊவா மாகாணசபைக்கு தேர்தல் நடத்தப்பட்டதன் பின்னர் இன்னும் மாகாணசபைகளுக்கு தேர்தல்கள் நடத்தப்படவில்லை. மாகாணசபைகளின் பதவிக்காலங்கள் நிறைவடைந்து கிட்டத்தட்ட ஆறு அல்லது ஏழு ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்னமும் தேர்தல் இடம்பெறவில்லை.

மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதில் தேர்தல் முறை தொடர்பான சட்டச்சிக்கல் காணப்படுவதால் அதனை நிவர்த்தி செய்யவேண்டும் எனவும் கூறப்படுகின்றது. சில கட்சிகள் தேர்தலை உடனடியாக நடத்துமாறு வலியுறுத்துகின்றன. எனவே, மாகாணசபையை அடிப்படையாக வைத்து, பரந்துபட்ட மீளாய்வுக் கலந்துரையாடல் இடம்பெறவேண்டியது அவசியம் என்பது இதிலிருந்து புலப்படுகின்றது.

மாகாணசபை ஊடாக மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. மாறாக இதற்கு பெரியளவு நிதி செலவிடப்படுகிறது. எனவே, மாகாணசபை நாட்டுக்குத் தேவையா என்பது தொடர்பில் மீளச் சிந்திக்கவேண்டிய காலம் மீள உருவாகியிருக்கிறது. இன்றைய காலகட்ட சவால்களுக்கு இந்த மாகாணசபை முறைமை பதில் அளிக்கிறதா என்பது குறித்துச் சிந்திக்கவேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் சிறப்பாக இயங்குகின்றன. நாட்டின் சகல பகுதிகளுக்குமான அபிவிருத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கெடுக்கலாம். எனவே, இடையில் மாகாணசபை அவசியமா? என்ற கேள்வி எழுகிறது. இலங்கையில் மாகாணசபையானது அரசியல்வாதிகள் நாடாளுமன்றம் செல்வதற்கான இடையீட்டுக் காலமாகவே உள்ளது - என்றார். (அ-ம-இ)

### ஜனாதிபதியின்...

மிகவும் குறைந்தளவு பாதுகாப்புடன் வலம்வருகின்றார் என்று பலரும் கருத்துத் தெரிவிப்பதைப் பார்க்கின்றேன். உண்மையில் இந்தக் கருத்துகள் முட்டாள்தனமானவை. என்னைப் பொறுத்தவரை ஜனாதிபதி அநுரவின் பாதுகாப்பு அதிகரிக்கப்படவேண்டும். ஜனாதிபதி பயணிக்கும்போது அவருடன் ஒரு குழு செல்லவேண்டியது அவசியம். இது தவிர்க்கமுடியாத ஒன்று. ஜனாதிபதிக்கு நிச்சயம் அச்சுறுத்தல்கள் உள்ளன. எனவே, குறைவான பாதுகாப்பை வைத்திருக்க வேண்டிய அவசியமென்ன? தனக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்படுவதை தோழர் அநுரகுமாரவும் விரும்பமாட்டார். ஆனால், அவருக்கு ஹெலிகொப்டர் மூலம் கண்காணிப்பும் பாதுகாப்பும் வழங்கப்படவேண்டும் என்பதே எனது கருத்தும் நிலைப்பாடுமாகும் - என்றார். (அ-ம-இ)

### சிவில்...

போதைப்பொருள் வலையமைப்பையும் தடுப்பதற்கு, சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் பொலிஸாருடன் இணைந்து செயற்படுவது மிகவும் அவசியமாகும். எனவே, போதைப்பொருள் தடுப்புச் செயற்றிட்டத்துக்காக, நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களையும்மையப்படுத்தி சிவில் பாதுகாப்பு அதிகாரிகளை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். தற்போதிருந்து இந்தப் பணிகள் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (அ-ம-இ)

### எரியுண்ட...

அல்லைப்பிட்டி - வெண்புறவி பகுதியைச் சேர்ந்த ம.சேவியர் (வயது-80) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

வயோதிபர் வாழ்ந்த வீட்டிலிருந்து புகை வெளிவருவதை, வீதியால் சென்ற அவரின் உறவினர் கண்டுள்ளார். இதையடுத்து, அவர் உள்ளே சென்று பார்த்தபோது அந்த முதியவர் எரியுண்ட நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கும், கிராம அலுவலருக்கும் தகவல் வழங்கப்பட்டது. தீவகப்பகுதி மரண விசாரணை அதிகாரி என்.தியாகராசா சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டதுடன், சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-26-66)

### வவுனியாவில்...

நேற்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி - பாரதிபுரத்தைச் சேர்ந்த ஜெயசீலன் திவாகரன் (வயது- 23) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

திருகோணமலையில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த மோட்டார்சைக்கிள், வவுனியா பரசங்குளம் பகுதியில் சென்றபோதே விபத்துச் சம்பவித்துள்ளதாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-110-26)

### கோத்தாபயவுக்காக...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல்வாதிகள் அதிகாரத்துக்கு வருவதற்காகவும் கைப்பற்றிய அதிகாரத்தில் தொடர்ந்து இருப்பதற்காகவுமே கடந்த காலங்களில் இனவாதத்தைப் பயன்படுத்தினர். மஹிந்த ராஜபக்சவும் அப்படித்தான், கோத்தாபய ராஜபக்சவும் அப்படித்தான். கோத்தாபய ராஜபக்ச அதிகாரத்துக்கு வருவதற்காகத்தான் ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டதா என்ற சந்தேகம் உண்டு. இப்போது அதற்கான விசாரணை இடம்பெறுகிறது.

அதிகாரத்துக்கு வருவதற்கும் அதிகாரத்தில் நிலைத்து இருப்பதற்கும் இனவாதத்தைப் பயன்படுத்த எவருக்கும் இனியும் இடமில்லை. இந்தத் தகவலை மிகவும் ஆணித்தரமாகக் கூறிக்கொள்கின்றோம்.

ஒரு தலைமுறையை 1983ஆம் ஆண்டில் இழந்தோம். அதன் தொடர்ச்சியாக பல அழிவுகளைச் சந்தித்து 2009ஆம் ஆண்டு இன்னொரு தலைமுறையையும் இழந்தோம். 2022ஆம் ஆண்டுதொடக்கம் 2024ஆம் ஆண்டுவரை ஏராளமான மக்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். இதுவும் ஒருவகைக் கொலைதான். கோத்தாபயவால் நிகழ்த்தப்பட்ட பெரும் அநியாயம் இது.

2015ஆம் ஆண்டுவரை ராஜபக்சக்கள் இனவாதத்தை வளர்த்துக் கொண்டுவந்தனர். 2015ஆம் ஆண்டின் பின்னர், இனவாதத்துக்குப் பொருந்தக்கூடிய நிலையை உருவாக்கினார்கள். அதுதான் ஈஸ்டர் தாக்குதலாக வெளிவந்தது. இனவாதம் இழப்பையும், அழிவையும் தவிர வேறு எதையும் தராது - என்றார். (அ-ம-50)

### தவறான...

கொக்குவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரியான நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை சேனாதிராஜாவின் ஆறாவது மாத அஞ்சலி!

## சங்கானையில் சிறப்பாக முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சோ.சேனாதிராஜாவின் ஆறாவது மாத நினைவஞ்சலி நிகழ்வு சங்கானை கலாசார மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.**



தந்தை செல்வா நற்பணி மன்றமும் வட்டுக் கோட்டை பகுதி மக்களும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, மாவை சோ.சேனாதிராஜாவின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவுப் பேருரைகள் ஆற்றப்பட்டன. இதைத் தொடர்ந்து நினைவுச் சின்னங்களும், மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.



நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மாவை சோ.சேனாதிராஜாவின் புதல்வன் மா.கலையமுதன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்குமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான சபாகுகதாஸ், கஜதீபன், யாழ். மாநகரசபையின் உறுப்பினர் தர்ஷானந், தந்தை செல்வாவின் பேரன் இளங்கோவன், வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் திருமதி ஐ.நாகரஞ்சினி, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சர்வேஸ்வரன், இலங்கைத் தமிழரசு கட்சியின் உறுப்பினர்கள், தந்தை செல்வா நற்பணி மன்றத்தினர், போராளிகள், நலன்புரி சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-27)



மந்துவில் வள்ளுவர் முன்பள்ளி சிறார்களின் வேடந்தாங்கல் நிகழ்வு முன்பள்ளி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி ஒருங்கிணைப்பாளர் திருமதி சாந்தினி செந்தூரன் கலந்துகொண்டார். (ச-25,9)



புங்கடி புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66)

## தெய்வீகக் கூட்டத்தொடர்

யாழ்ப்பாணம், ஜூலை 28

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத்தொடர் நிகழ்வு, சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தலைவர் சிவஸ்ரீ து.ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதன்போது நல்லூர் சைவ வித்தியா விருத்திச்சங்க அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள நல்லூர்ப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ர. நகுலாவின் வரவேற்புரையும், சிறப்பு நிகழ்வாக "லலித கலாவேதி" திருநாவுக்கரசு லவணியன் வழங்கும் இசைக்கச்சேரி நிகழ்வும், மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும், நல்லூர் சைவ வித்தியா விருத்திச்சங்க அறநெறிப்பாடசாலை ஆசிரியர் சஞ்சிகா சந்திரகாந்தனின் நன்றியுரையும் இடம்பெறவுள்ளன. (ச-41)

## சிறுமியைக் காணவில்லை என தாயார் பொலிஸில் முறைப்பாடு!

யாழ்ப்பாணம், ஜூலை 28

பாடசாலைக்குச் சகோதரனை ஏற்றச் சென்ற மாணவி 10 நாள்களாகியும் வீடு திரும்பவில்லை என்று அவருடைய தாயார் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

17 வயதுடைய மாணவியான பிரதீபன் விகாசினி என்பவரையே கடந்த 15ஆம் திகதியிலிருந்து காணவில்லை என அவரது தாயார் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். இந்த முறைப்பாடு தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## ஏற்றுமதித்துறை முன்னேற்றம்

கொழும்பு, ஜூலை 28

**இலங்கையின் 2025ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஏற்றுமதித் துறை குறிப்பிடத்தக்க நேர்மறையான செயற்றிறனையும் நிலையான முன்னேற்றத்தையும் காட்டிவருவதாக இலங்கை ஏற்றுமதி மேம்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது. 2025ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மொத்த ஏற்றுமதி வருவாய் 6,933.35 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.**

கடந்த 2024ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது இது 7.14% வளர்ச்சியாகும். 2025 ஜனவரி முதல் மே வரையிலான காலகட்டத்தில் சரக்கு ஏற்றுமதி 5,344.23 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது. இது 2024ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 5.46% அதிகரிப்பாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

### கட்டிடம் வாடகைக்கு

A35 பிரதான வீதி, புன்னை நீராவி, விசுவமடு சந்தி,கிளிநொச்சியில் அமைந்துள்ள 52 x 33 நீள அகலம் கொண்ட கட்டிடம் வாடகைக்குண்டு. Bank, Insurance company க்கு கொடுக்கலாம்.

தொடர்புகளுக்கு: 077 215 8252, 077 744 6856
Swiss Whatsapp Regular Call: 004 177 9075 523

### வேலையாள் தேவை


யாழ் நகரில் பகுதிநேரமாக வெல்டிங் வேலை செய்வதற்கு வேலையாள் தேவை.



தொடர்புகளுக்கு:
071 411 5000

### மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 03 . 1943



மறைவு 27 . 07 . 2025

### ஆறுமுகம் இந்திராணி

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும் 53/13 ஆடியபாதம் வீதி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இந்திராணி அவர்கள் நேற்று (27.07.2025) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆறுமுகம் அவர்களின் மனைவியும், தபோநிதி, பிறேமச்சந்திரன், திருலோகநாயகி, தவச்செல்வி, யோகேஸ்வரன், யோகலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சற்குணராசா, காலஞ்சென்ற சிவனேஸ்வரி, கஜேந்தினி, காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் வரதராசா, விஜயகுமாரி, தர்சினி ஆகியோரின் மாமியாரும், சிந்துஜா - ஜெயபிரகாஸ், தர்சன், தனுஜா, நிருஜா - மயூரன், மிதுஷன் - ஜீவிதா, மிதுசாலினி - மனேஷ், திவ்ஜா, சுபோகா, சினேக்கா, துர்க்கா, அனுஷன், டக்ஷஜன், சுதனிகா, சுதர்ஷன், தர்சிகா - ஜவாகர், தனுஷன், திருவேரகன், சாந்தரூபன், குகரூபன், ஹரீசன், துசானி, கர்சன், ஹல்யானி, திலக்சனா ஆகியோரின் பேர்த்தியும் தியாஷிதா, மிதுன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (28.07.2025) திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 199 9286
076 973 2080



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org